ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1861/2 - 2014 මැයි මස 05 වැනි සඳුදා - 2014.05.05

*1861/2 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மே மாதம் 05 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### காணிச் சீர்திருத்த ஆணைக்குழு

*1981 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, விசேட ஏற்பாடுகள் சட்டத்தினாலும், 1986 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்த விசேட ஏற்பாடுகள் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச்சீர்திருத்த சட்டத்தின் 29 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

சட்டத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு இதன் கீழான அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கமத்தொழில் காணியில் அல்லது காணிகளில், அத்தகைய காணி அல்லது காணிகள் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு உரித்தாக்கப்பட்ட திகதிக்கு நேரடுத்து முன்னரான திகதியில் அக்கறை கொண்டிருந்த ஒவ்வொரு ஆளும் 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 05 ஆந் திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள்ளாக அத்தகைய காணி அல்லது காணிகள் தொடர்பில் சட்டத்தின் பிரகாரம் கொடுக்கப்பட வேண்டிய நட்டஈட்டுக் கோரிக்கையை முப்பிரதிகளில் சமர்ப்பிப்பதுடன் அந்தக் கோரிக்கையில் பின்வருவனவற்றையும் குறித்து காட்டல் வேண்டுமென இத்தால் பணிக்கின்றேன்.

(அ) நட்டஈடு கோருபவரின் பெயர் ;

(ஆ) அத்தகைய காணியில் அல்லது காணிகளில் அவருக்குள்ள அக்கறையின் தன்மை ;

(இ) அவருடைய கோரிக்கையின் விபரம் ;

(ஈ) அத்தகைய நட்டஈட்டிலிருந்து எவ்வளவு அவரால் கோரப்படுகின்றது என்பது.

சகல நட்டஈட்டுக் கோரிக்கைகளும் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் தவிசாளருக்குப் பதிவுத் தபாலில் அனுப்பவும்.

சட்டத்தரணி நிமல் ஜீ. புஞ்சிஹேவா,
தலைவர்,
காணிச்சீர்திருத்த ஆணைக்குழு.

காணிச் சீர்திருத்த ஆணைக்குழு,
இல. சீ 82, ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தை,
கொழும்பு 07,
2014, ஏப்பிறல் 28.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

| தொடர் இல. | விசேட இல. | வெளியிடுபவரின் பெயர் | காணியின் பெயர் | மாவட்டம் | கிராமம் | ஒதுக்கப்பட்ட விஸ்தீரணம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | ஏ. | றூ. | பே. |
| 1. | கொ/ 3436 | காலமாகி உள்ளவருமான திரு. முகந்திரம் டொன் தேமிஸ் கருணாதிலக | கொடித்துவக்கு பங்குவ அல்லது கொடிப்பிலி | இரத்தினபுரி | ஜாதுவன்கொட | 150 | 00 | 00 |

5- 565/1

---

திருத்தம்

**1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச்சீர்த்திருத்த சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தலைத் திருத்தம் செய்தல்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1986.06.23 ஆந்திகதிய 407/4 ஆம் இலக்க மற்றும் 1987.01.16 ஆந்திகதிய 436/6 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் அடையாளமறியும் எண். Co/1409 ஆம் இலக்க அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு, திருத்தம் செய்யப்பட்ட பின்வரும் அறிவித்தல் அதற்கு பதிலாக வெளியிடப்படுகின்றது.

**அட்டவணை**

| விசேட இல. | வெளியிடுபவரின் பெயர் | காணியின் பெயர் | மாவட்டம் | கிராமம் | ஒதுக்கப்பட்ட விஸ்தீரணம் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | ஏ. | றூ. | பே. |
| Co/1409 | ம/ப ஹெரின்டென் தோட்டக் கம்பனி | ஹெரின்டென் எஸ்டேட் | நுவரெலியா | கொட்டிகல | 232 | 03 | 37 |

சட்டத்தரணி நிமல் ஜீ. புஞ்சிஹேவா,
தலைவர்,
காணிச்சீர்திருத்த ஆணைக்குழு.

காணிச் சீர்திருத்த ஆணைக்குழு,
இல. சீ 82, ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தை,
கொழும்பு 07,
2014, ஏப்பிறல் 28.

5- 565/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.